# 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 26/2006)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Educational Development Day (Declaration and Celebration) Act, 2006

## (Tamil Nadu Act No. 26 of 2006)

(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள்
அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

## 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 26/2006)


| பிரிவு | பொருளடக்கம் |
| --- | --- |
| 1. | குறுந்தலைப்பும் தொடக்கமும். |
| 2. | பொருள்வரையறைகள். |
| 3. | கல்வி வளர்ச்சி நாளை விளம்புகை செய்தல். |
| 4. | கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுதல். |
| 5. | தகுதிவாய்ந்த அலுவலர். |
| 6. | தகுதிவாய்ந்த அலுவலர் பொது ஊழியராதல் வேண்டும். |
| 7. | பணிப்புரை வழங்குவதற்கான அரசின் அதிகாரம். |
| 8. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. |
| 9. | விதிகளைச் செய்வதற்கான அதிகாரம். |
| 10. | இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம். |

# 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 26/2006)

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2006ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15–ஐ "கல்வி வளர்ச்சி நாள்" என விளம்புகை செய்வதற்கும், அதனுடன் தொடர்புடைய அல்லது இடைவிளைவான விபரங்களுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15–ஐ "கல்வி வளர்ச்சி நாள்" என விளம்புகை செய்வது எனவும், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுவது எனவும் தமிழ்நாடு அரசால் கொள்கை முடிவு ஒன்று எடுக்கப்பட்டுள்ளதால்;

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

**1. குறுந்தலைப்பும் தொடக்கமும்.–** (1) இந்தச் சட்டம், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம் குறிக்கக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்.–** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "தகுதிவாய்ந்த அலுவலர்" என்பது, பிரிவு 5இன்படி அரசினால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அலுவலர் எனப் பொருள்படும்;

(b) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(c) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(d) "பள்ளி" என்பது,–

(i) மாநிலத்தால் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் பேணி வரப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவுமோ; அல்லது

(ii) அரசமைப்பின் 30ஆம் அமைப்புவிதி (1) ஆம் கூறின்கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் மாநில நிதியிலிருந்து இருந்து உதவி பெறுகிற அல்லது உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலான தனியார் கல்வி முகவாண்மை எதனாலும் நிறுவப்பட்டு, நிருவகிக்கப்பட்டு அல்லது பேணிவரப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவுமோ; அல்லது

(iii) அரசமைப்பின் 30ஆம் அமைப்புவிதி (1) ஆம் கூறின்கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் மாநில நிதியிலிருந்து

இருந்து உதவி பெறுகிற அல்லது உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலான மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, பதின்மர் (மெட்ரிக்குலேஷன்) பள்ளி, ஆங்கிலோ–இந்தியர் பள்ளி அல்லது கீழ்த்திசைப் பள்ளி (Oriental School) எதுவுமோ; அல்லது

(iv) இதன்பொருட்டு, அரசால் அறிவிக்கப்படக்கூடிய அத்தகைய பிற பள்ளி எதுவுமோ,

எனப் பொருள்படும்.

**விளக்கம்.–** இந்தக் கூறின் நோக்கத்திற்காக,–

(i) மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி என்பன, மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) தொடக்கப் பள்ளி என்பது, ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iii) நடுநிலைப் பள்ளி என்பது, ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் எட்டு வரையிலான வகுப்புகளையோ கொண்டிருத்தல் வேண்டும்;

(iv) உயர்நிலைப் பள்ளி என்பது, ஒன்று முதல் பத்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஆறு முதல் பத்து வரையிலான வகுப்புகளையோ அல்லது ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளையோ கொண்டிருத்தல் வேண்டும்;

(v) மேல்நிலைப் பள்ளி என்பது, ஒன்று முதல் பன்னிரெண்டு அல்லது ஆறு முதல் பன்னிரெண்டு அல்லது ஒன்பது முதல் பன்னிரெண்டு வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**3. கல்வி வளர்ச்சி நாளை விளம்புகை செய்தல்.–** தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15, "கல்வி வளர்ச்சி நாள்" என இதன் மூலம் விளம்புகை செய்யப்படுகிறது.

**4. கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுதல்.–** (1) ஒவ்வொரு பள்ளியும் கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுதல் வேண்டும்.

(2) கல்வி வளர்ச்சி நாளானது, பின்வருமாறு குறித்துரைக்கப்பட்ட முறையில் கொண்டாடப்படுதல் வேண்டும்:–

(a) தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப்படமானது அலங்கரிக்கப்பட்டு, அவருக்கு மாணவர்கள் புகழ் அஞ்சலி செலுத்துதல் வேண்டும்;

(b) தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்விக்காக ஆற்றிய பணிகள் குறித்து கட்டுரை எழுதுதல், படம் வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல் மற்றும் பேச்சுப் போட்டி போன்ற பல்வகைப்பட்ட போட்டிகள் மாணவர்களுக்காக நடத்தப்படுதல் வேண்டும்;

(c) வகுத்துரைக்கப்படும் பிற முறையில்.

(3) கல்வி வளர்ச்சி நாள் விடுமுறை நாளில் வருமானால், அன்றைய நாள் அனைத்து பள்ளிகளுக்கும் வேலை நாளாக இருத்தல் வேண்டும் மற்றும் அதற்குப் பதிலாக மற்றொரு வேலை நாள் விடுமுறை நாளாக தகுதிவாய்ந்த அலுவலரால் விளம்புகை செய்யப்படுதல் வேண்டும்.

**5. தகுதி வாய்ந்த அலுவலர்.–** (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக மாவட்டக் கல்வி அலுவலர் படிநிலைக்குக் குறையாத கல்வித் துறையின் அலுவலர் எவரையும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்தும் நோக்கத்திற்காகத் தகுதிவாய்ந்த அலுவலராக நியமிக்கலாம் மற்றும் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு தகுதிவாய்ந்த அலுவலர்களை நியமிக்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அலுவலர் வகுத்துரைக்கப்படக் கூடிய அதிகாரங்களைச் செலுத்துதலும், பிற பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

**6. தகுதிவாய்ந்த அலுவலர் பொது ஊழியராதல் வேண்டும்.–** பிரிவு 5இன்கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அலுவலர் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860), பிரிவு 21இன் பொருளின்படி ஒரு பொது ஊழியராகக் கருதப்படுதல் வேண்டும்.

**7. பணிப்புரை வழங்குவதற்கான அரசின் அதிகாரம்.–** (1) அரசானது, ஆணையின் மூலமாக பொது நலனை முன்னிட்டு அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வு எதிலும், இந்தச் சட்டத்தின்படி தகுதிவாய்ந்த அலுவலர் விசாரணை ஒன்றைச் செய்வதற்கோ அல்லது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ பணிக்கலாம், மற்றும் தகுதிவாய்ந்த அலுவலர் தன்னால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவைக் குறித்தோ

அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முடிவைக் குறித்தோ வகுத்துரைக்கப்படக்கூடிய காலஅளவிற்குள் அரசிற்கு அறிக்கையை அளித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதன் பேரில், அரசானது, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளைப் பிறப்பித்தல் வேண்டும், மற்றும் அத்தகைய பணிப்புரையானது இறுதியானதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

8. **நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.—** இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், தகுதிவாய்ந்த அலுவலருக்கோ, அரசுக்கோ அல்லது அதன் அலுவலர்கள் எவருக்குமோ எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

9. **விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.—** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமானால் அல்லது

அப்பேரவை அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமானால், அவ்விதி அல்லது அந்த அறிக்கை அல்லது அவ்வாணை அதற்குப் பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது, நிகழ்விற்கேற்ப, நடைமுறைக்கு வராமல் போதல் வேண்டும், எனினும் அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னர் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**10. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ, உகந்ததாகவோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலஅளவு முடிவடைந்ததற்குப் பின்னர் பிறப்பிக்கப்படுதல் கூடாது.